# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

# சிற்றுண்டிச்சாலைகளுக்கான கேள்விமனுக் கோரல் - 2026

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒலுவில், சம்மாந்துறை வளாகங்களில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடப்படும் சிற்றுண்டிச்சாலைத் தொகுதிகளை நடாத்துவதற்கு அனுபவமும், தேர்ச்சியும் பெற்ற சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து இத்தால் அதற்கான கேள்விகள் தனித்தனியே கோரப்படுகின்றன. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுக்கள் தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கேள்விச்சபைத் தலைவரினால் 30.06.2025 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) மு.ப. 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**ஒலுவில் வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைகள்**

1. பெண்கள் விடுதி (FVG 01) சிற்றுண்டிச்சாலை
2. கலை மற்றும் கலாசார பீட சிற்றுண்டிச்சாலை
3. ஆண்கள் விடுதி (FVB 01) சிற்றுண்டிச்சாலை
4. தொழிநுட்பவியல் பீட சிற்றுண்டிச்சாலைகள்
5. வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கான சிற்றுண்டிச்சாலை
6. இஸ்லாமிய கற்கைகள் மற்றும் மற்றும் அரபு மொழி பீட சிற்றுண்டிச்சாலைகள்
7. பெண்கள் விடுதி (FVG 04) சிற்றுண்டிச்சாலை
8. ஆண்கள் விடுதி (FVB 05) சிற்றுண்டிச்சாலை
9. பொறியியல் பீட சிற்றுண்டிச்சாலை
10. உத்தியோகத்தர் சிற்றுண்டிச்சாலை (ஒலுவில்)
11. பொதுவான சிற்றுண்டிச்சாலை - 1
12. பொதுவான சிற்றுண்டிச்சாலை - 2
13. பொதுவான சிற்றுண்டிச்சாலை (Cafeteria ) - 3
14. Juice bar (பொதுவான சிற்றுண்டிச்சாலை)
15. Milk Bar (பொதுவான சிற்றுண்டிச்சாலை)

**சம்மாந்துறை வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலைகள்**

16. பிரயோக விஞ்ஞானங்கள் பீட சிற்றுண்டிச்சாலை
17. ஆண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலை பிரயோக விஞ்ஞான பீடம்

இதற்கான கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்வதற்கு **மீளளிக்கத்தக்க வைப்புப் பணமான ரூபா. 1,000.00 மற்றும் மீளளிக்கப்படாத கட்டுப்பணமான ரூபா. 1,000.00** போன்ற தொகைகளை பல்கலைக்கழக காசாளரிடம் (Shroff Counter) செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினைச் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, மாணவர் மற்றும் நலன்புரிப் பிரிவின் பிரதி பதிவாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

பெறப்பட்ட கேள்விப் பத்திரத்தினைப் பூரணப்படுத்தி உரிய திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிப்பதன் மூலம் இதற்கான தகுதியினைப் பெறலாம். பொருத்தமான சிற்றுண்டிச்சாலை நடத்துனர்களை தெரிவு செய்வதில் பல்கலைக்கழகத்தின் தீர்மானமே இறுதியானதாகும் என்பதை கேள்விமனுக்களை சமர்ப்பிக்கும் மனுதாரர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இவ்விதம் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களுக்கு குறித்தொதுக்கப்படுகின்ற சிற்றுண்டிச்சாலையில் உணவு மற்றும் சிற்றுண்டி வகைகளை பல்கலைக்கழக வழிகாட்டுதலுக்கமைய வழங்குதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி மனுக்கள் 30.06.2026 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **"பிரதி பதிவாளர், மாணவர் மற்றும் நலன்புரி பிரிவு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்"** என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் இரு பிரதிகளை அனுப்புதல் வேண்டும். அல்லது பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டிருக்கும் கேள்விமனுப் பெட்டியினுள் இடப்படல் வேண்டும். குறித்த திகதி மற்றும் நேரத்திற்கு பிந்திக் கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சிற்றுண்டிச்சாலைக்கான கேள்விமனு - 2026"** எனவும் **தாங்கள் விண்ணப்பிக்கும் குறித்த சிற்றுண்டிச்சாலையின்/களின் தொடரிலக்கம் மற்றும் பெயர்களைக் குறிப்பிட்டு** அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Acting Registrar
South Eastern University of Sri Lanka

**பதிவாளர்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**பல்கலைக்கழகப் பூங்கா,**
**ஒலுவில்**
**09.06.2026**